# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு


පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
**பொதுஅலுவலகம்**
**General Office**
ෆැක්ස්/தொலைநகல்/Fax:011-2868426
***Web: www.elections.gov.lk***

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය(10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரணமாவத்தை, இராஜகிரிய (10107)
***e-mail: info@elections.gov.lk***


| | | |
|---|---|---|
| මගේ අංකය:<br>எனது இல.: EC/LI&P/LAE/2023/21 | ඔබේ අංකය:<br>உமது இல.: | දිනය:<br>திகதி: 2023.01.06 |

சுற்றறிக்கை இல. 22

போட்டியிடுகின்ற அனைத்து அரசியற் கட்சிகளின் செயலாளர்கள்/
அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு,

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2023
தேர்தற் பிரச்சார அலுவலகங்களைத் தாபித்தல்

எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்குரிய தேர்தற் பிரச்சார அலுவலகங்களைத் தாபித்து பேணிச் செல்லும்போது பின்பற்றியொழுக வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக தங்களது கவனத்தை ஈர்ப்பதற்காக இக்கடிதம் வெளியிடப்படுகின்றது.

02. 2017 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தில் (262 ஆம் அத்தியாயம்) கட்சி/ வேட்பாளர் பிரச்சார அலுவலகங்களைத் தாபித்தல் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இருப்பினும், இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களைத் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வேட்பாளர்களின் பிரச்சாரத் தேவைகளைக் கவனத்திலெடுத்து பின்வரும் நிபந்தனைகளுககு அமைய குறித்த பிரதேசத்தின் கிராம அலுவலர் மூலம் மாவட்ட தேர்தல்கள் அலுவலர்களுக்கும், உரிய பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்து தாபிக்கப்படும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்களைத் தாபிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

03. போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் ஓர் உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு மத்திய அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகத்தைத் தாபிக்க முடியும்.

04. அதற்கமைய போட்டியிடுகின்ற ஒரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு வட்டாரமொன்றுக்கு ஓர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகத்தை மாத்திரம் நிரந்தரக் கட்டிடமொன்றில் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். அதற்கான கோரிக்கை அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால் சுயேச்சைக் குழுவொன்றாயின், குழுத் தலைவரினாலும் கட்சியொன்றாயின், கட்சிச் செயலாளரினாலும்/ செயலாளரினால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவரினாலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு, அத்தகைய அலுவலகங்கள் வேட்பாளரொருவருக்கு மாத்திரம் குறித்தொதுக்கப்பட்ட அலுவலகமொன்றல்லவெனவும், குறித்த கட்சி/குழு சார்பாக குறித்தொதுக்கப்பட்ட அலுவலகமெனவும் வலியுறுத்தப்படுகின்றது. பல் அங்கத்தவர் வட்டாரமொன்றில் மாத்திரம் சிறப்பான ஒரு சந்தர்ப்பமாகக் கருதி உரிய அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை கொண்ட அலுவலகங்களைத் தாபிக்க முடியுமென்பதோடு, அதற்கு தனிவேறாக அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

05. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 81 ஆ பிரிவுக்கமைய பெயர்குறித்த நியமன காலப்பகுதியின் முதலாவது நாளில் ஆரம்பித்து வாக்கெடுப்புத் தினத்திற்கு மறுநாளில் முடிவடையும் காலப்பகுதியினுள் பிரச்சாரக் கூட்டங்கள் நடாத்தப்படும் நாளொன்றில் அத்தகைய பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் வளவிலும் வேட்பாளர் பயணிக்கும்போது மாத்திரம் குறித்த வாகனத்தினுள் மாத்திரமே கட்சி வேட்பாளர் பிரச்சாரப் பலகைகளைக் காட்சிப்படுத்த முடியும். ஒரு விசேட சந்தர்ப்பமாகக் கருதி இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகங்களில் கட்சியின் பெயர், சின்னம், கட்சித் தலைவரின் உருவப்படம் மற்றும் தேவையெனில், அனைத்து வேட்பாளர்களினதும் உருவப்படங்களைக் கொண்ட ஒரு பிரச்சாரப் பலகையை மாத்திரம் காட்சிப்படுத்த முடியும். அத்தகைய அலுவலகங்கள் அமையப் பெற்றுள்ள காணியை சோடனை செய்தல் தொடர்பில் ஆட்சேபனையொன்றில்லை. இருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெருந்தெருக்கள், பாதையோரங்கள் (நடை பாதை) அல்லது மின் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள் ஆகியவற்றில் இதனோடு தொடர்புடைய சோடனைகள் செய்யப்படலாகாது.

06. அரசாங்க உத்தியோகபூர்வ குடிமனைகளில் அல்லது மதத்தலங்களில் பிரச்சார அலுவலகங்களைத் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாதென்பதால், அவ்வாறான இடங்களுக்குப் பதிலாக போட்டியிடுகின்ற வட்டாரத்தில் வேறு நிரந்தரக் கட்டிடமொன்றில் பிரச்சார அலுவலகமொன்றைத் தாபிப்பதற்காக கோரிக்கை முன்வைக்கப்படின், அது தொடர்பாக பலிசீலிக்க முடியும்.

07. இவ்வனைத்து அலுவலகங்களிலும் ஒரு பிரச்சாரப் பலகையைப் பொருத்துவதற்கும் அலுவலக வளவினுள் சோடனைகளைச் செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்க முடியுமென்றபோதிலும், அவ்வாறான அனைத்து அலுவலகங்களிலும் உள்ள பலகைகள் மற்றும் சோடனைகள் வாக்கெடுப்புத் தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் அகற்றப்படல் வேண்டுமென்பதோடு, வேட்பாளர் வதியும் வீடு அல்லாத மற்றும் அத்தகைய அலுவலகங்கள் வாக்கெடுப்புத் தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் அகற்றப்படுதல் வேணடும்.

08. அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்கள் தொடர்பாக அறிவிப்பதற்காக இத்தோடு இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தை ஒவ்வோர் அலுவலகத்திற்காகவும் மூன்று (3) பிரதிகளில் பூரணப்படுத்தி மாவட்ட பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அதாவது உள்ளூர் அதிகார சபையைப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலருக்குச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, அதில் ஒரு பிரதி தெரிவத்தாட்சி அலுவலர்/ மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் வைத்துக்கொள்ளப்படும். எஞ்சிய இரண்டு (2) பிரதிகளையும் உரிய பொலிஸ் நிலையத்திற்கு சமர்ப்பித்தல் வேணடும். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் அப்பிரதிகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு அலுவலகத்தைத் தாபிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு ஒரு பிரதியை பொலிஸ் நிலையத்தில் வைத்துக்கொண்டு மற்றைய பிரதி மாத்திரம் விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படுகின்ற அனுமதியளிக்கப்பட்ட படிவத்தை எல்லா நேரங்களிலும் அலுவலகத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு வருகை தருகின்ற தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அல்லது பொலிஸ் அலுவலர்களுக்கு எளிதில் அவதானிக்கத்தக்க விதத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

09. எந்தவோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகத்தையும் அரச/ மாகாண சபை/ உள்ளூர் அதிகார சபை/ அரச கூட்டுத்தாபனம் அல்லது சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், இடமொன்றில், உத்தியோகபூர்வ விடுதியொன்றில், ஒதுக்குக் காணியொன்றில் தாபிக்க முடியாது. இருப்பினும், காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தற்போதும் அரசுடைமையானதாகவுள்ள குடியேற்ற வீடொன்றில் அல்லது அரசுடைமையான வீட்டுத் தொகுதியொன்றின் வீடொன்றில் முறைப்படியான அனுமதியோடு வதிகின்ற ஒரு வேட்பாளருக்கு தனது வீட்டை அலுவலகமொன்றாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். இருப்பினும், வேட்பாளரொருவர் குறிப்பிட்ட இடத்தில் வதிந்திருக்கவில்லையெனில் அல்லது அனுமதியின்றி வதிபவராக இருப்பின், அவ்வாறான இடமொன்றில் அலுவலகமொன்றைப் பேணிச் செல்ல இடமளிக்க முடியாது.

10. (I) ஏதேனுமொரு கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அலுவலகமொன்றில், வேறு கட்சியொன்றின் அல்லது வேறு குழுவொன்றின் அல்லது வேறு கட்சியொன்றின்/ குழுவொன்றின் வேட்பாளரொருவரின் சுவரொட்டிகள், உருவப்படங்கள், பதாகைகள் என்பவற்றைக் காட்சிப்படுத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும். வேறு கட்சியொன்றின் அல்லது வேறு கட்சியொன்றின் வேட்பாளரொருவரின் புகைப்படங்கள்/ பெயர்கள், உரிய வாக்கியங்கள் என்பன வெளிக்காட்டி வைக்கப்படுமாயின், அது அனுமதி பெறப்படாத அலுவகைமொன்றாக் கருதி அகற்றப்படுமென்பதோடு, சட்டமீறல் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

(II) ஏதேனுமொரு கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அலுவலகமொன்றில் கட்சியின்/ குழுவின் வேட்பாளரொருவரின் பெயரை மாத்திரம் காட்சிப்படுத்த முடியாது என்பதோடு அக்கட்சிக்குரிய/ அக்குழுவுக்குரிய தேர்தல் சின்னம், வேட்பாளரின் பெயர் காட்டப்பட்டுள்ள ஒத்த அளவில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். சுயேச்சைக் குழு மற்றும் கட்சி அலுவலகங்களூடாக வேறு கட்சிகள் மற்றும் குழுக்களின், கட்சிகளின், வேட்பாளர்களின் பெயர்கள் பிரச்சாரம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

11. அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட கட்சி அலுவலகமெதனையும் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகம்/ தேர்தல் அலுவலகம்/ பிரதேச செயலகம் மற்றும் பொலிஸ் நிலையம் போன்ற நேரடியாக தேர்தலோடு தொடர்புடைய அரச நிறுவனங்களில் இருந்து 150 மீற்றருக்கு குறைந்த தூரத்தினுள் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. நகர சபைகளுக்காக இவ்வெல்லையை 100 மீற்றர் வரையும், மாநகர சபைகளுக்காக 75 மீற்றர் வரையும் குறைக்க முடியும். வேட்பாளரொருவரின் வீடு இந்த எல்லையினுள் அமையப் பெற்றிருப்பின், மேற்குறிப்பிட்ட தூர எல்லைகள் தொடர்பான உத்தரவு அங்கு செயல்வலுவற்றதாகும். அதேபோல் அரச பாடசாலைகள், வைத்தியசாலைகள், நீதிமன்றத் தொகுதிகள், உள்ளூர் அதிகார சபைகள், அஞ்சல் அலுவலகங்கள் போன்ற பொதுமக்கள் அடிக்கடி சேவைகளைப் பெறுவதற்காக வருகை தருகின்ற அரச நிறுவனங்களுக்கு வருகை தருகின்ற பொதுமக்களுக்கு இடையூறானதாக, அந்நிறுவனங்களுக்க அருகில் அல்லது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு இடையூறானதாக அமையும் விதத்தில் அரச பாடசாலைகளுக்கு அருகில் தேர்தல் அலுவலகங்களைத் தாபிப்பதைத் தவிர்க்குமாறு தங்களது முகவர்களையும், மும்முர ஆதரவாளர்களையும் அறிவுறுத்துமாறு அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவரகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்கள் ஆகியோரிடம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் அரச நிறுவனங்கள் அல்லது பாடசாலைகள் என்பவற்றின்

செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் விதத்தில் தாபிக்கப்படுகின்ற அலுவலகங்களை அகற்றுவதற்கு நேரிடும்.

12. இவ்வாறான தேர்தல் அலுவலகங்களுக்கு எதிரில் அல்லது அருகாமையில் அல்லது பொது வீதிகளில் வாகன நெரிசல் ஏற்படக்கூடியவாறு அல்லது பொது மக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடியவாறு வாகனங்களை நிறுத்தி வைப்பதையும், ஒலிபெருக்கி இயந்திரங்கள்/மெகா..போன் பாவிப்பதையும், பெரும் எண்ணிக்கையான ஆதரவாளர்களை அணிதிரட்டுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, அலுவலகங்களைப் பரிசோதிப்பதற்கு வருகை தருகின்ற பொலிஸ் அலுவலர்களுக்கும் தேர்தல் அலுவலர்களுக்கும் அதற்கு ஒத்துழைப்டை வழங்குதல் வேண்டும். அவர்களுக்கு இடையூறு விளைவித்தல் தேர்தலை நடாத்துவதற்கு விளைவிக்கப்பட்ட இடையூறொன்றாகக் கருதி நடவடிக்கையெடுக்கப்படும்.

13. இப்பனிப்புகள் காரணமாக முன்னைய தேர்தல்களின்போது சில காலமாக அரசியற் கட்சி அலுவலகமொன்றாகப் பேணப்பட்டு வருகின்ற இடமொன்றில் தேர்தற் பிரச்சார அலுவலகங்களைத் தாபிப்பதில் அசௌகரியமேதும் ஏற்படுமாயின், அத்தோடு வாக்கெடுப்புப் பிரிவினுள் அதற்குப் பொருத்தமான வேறு இடமொன்றில்லையெனில், அது தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விடயங்களைச் சமர்ப்பித்து மாற்று இடமொன்றுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அனுமதிக்காக கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கான சந்தர்ப்பமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

14. தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தலோடு தொடர்புடைய பிணக்குகள், தாக்குதல்கள், காயமேற்படுத்தல்கள், மனிதக் கொலைகள், அரசியல் பழிவாங்கல்கள் போன்ற தகாத நடத்தைகளைத் தடுப்பதற்கும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்ப்பதற்கும் நீதியானதும் சுதந்திரமானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான சூழமைவொன்றை உருவாக்கிக் கொள்வதற்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் விதிக்க நேரிட்டுள்ளது.

15. இந்த உத்தரவுகளை வேளைக்கேற்றவாறு திருத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு தத்துவமுள்ளதெனவும், அவ்வாறு செய்யப்படும் யாதேனும் மாற்றமொன்று காணப்படுமாயின் அது பற்றி சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள்:

1. பொலிஸ்மா அதிபர்
   - தயவுடன் தகவலுக்காகவும் உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காகவும்.
2. சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்கள்)
   - தயவுடன் தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும்.
3. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக விசாரணைசெய்யும் அலுவலர்கள்.
   - தகவலுக்காகவும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களையும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களையும் அறிவுறுத்தி அவர்களுக்கு இக்கடிதத்தின் பிரதியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக.
4. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள்
   - தகவலுக்காக.
5. தேர்தல் முறைப்பாட்டு விசாரணைகளுக்கான நிலையியற் குழுவின் அரசியற் கட்சிகளின் நிரந்தர முகவர்களுக்கு
   - தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்.
6. கண்காணிப்பு அமைப்புக்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கு
   - தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்.
7. தலைமை இணைப்பு அலுவலர் - தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு விசாரணைப் பணியகம்

සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி : 011-2868444
ෆැක්ස්/ தொலைநகல் : 011-2868445
*e-mail : chairman@elections.gov.lk*

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி : 011-2885207
ෆැක්ස්/தொலைநகல் : 011-2885208
*e-mail : cge@elections.gov.lk*

අතිරේක මැතිවරණ කොමසාරිස්
மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்
දුරකථන/தொலைபேசி: 011-2867471
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868448
*E-mail: addcomlegalinest@elections.gov.lk*

| கட்சிச் செயலாளர் / அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர் இக்கோரிக்கையைச் செய்தல் வேண்டும். |
|---|

உள்ளூர் அதிகார சபை: ..............................................................................

..............................................................................................................

(கட்சியின் செயலாளர்/ சுயேச்சைக் குழுவின் தலைவர்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்)

முகவரி: ..............................................................................................

..............................................................................................................

(பூரணப்படுத்துவதற்கு முன்னர் பின்புறத்திலுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.)

2023 ..........................................

தெரிவத்தாட்சி அலுவலர், ..........................................................................

(உள்ளூர் அதிகார சபையின் பெயர்)

| மூன்று(3) பிரதிகளில் பூரணப்படுத்த வேண்டும் என்பதோடு, அம்மூன்று பிரதிகளிலும் கிராம அலுவலர் குறிப்புக்களையிடுதல் வேண்டும். அம்மூன்று பிரதிகளையும் முதலில் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, தேர்தல்கள் அலுவலகத்தின் பரிந்துரை சகிதம் இரண்டு(2) பிரதிகள் வழங்கப்படும். அவ்விரண்டு பிரதிகளையும் உரிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த பின்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் குறிப்பு சகிதம் ஒரு(1) பிரதி விண்ணப்பித்தவருக்கு வழங்கப்படும். அதனை கட்சி/குழு அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும். |
|---|

| அலுவலகப் பாவனைக்கு | |
|---|---|
| வட்டாரத்தின் இலக்கம் | வட்டாரத்தின் பெயர் |
| | |

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, .............................................. பொலிஸ் நிலையம்.

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2023
## தேர்தல் அலுவலகங்களைத் தாபித்தல்

1. அலுவலக வகை: **அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகம்**

2. அலுவலகத்தின் அமைவிடமும் உரிய காணியின் உரித்தும் பற்றிய தகவல்கள்:-
   - 2.1 தேர்தல்கள் அலுவலகத்தின் முகவரி: ..............................................................................
     ..............................................................................................................
   - 2.2 மேற்படி முகவரிக்கு உரிய கிராம அலுவலர் பிரிவு: ..............................................................
   - 2.3 அம்முகவரிக்குரிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர்: .............................................................
   - 2.4 அம்முகவரியின் உரித்துடைமை:
     (இவ்விடம் ஏதேனும் அரச நிறுவனமொன்றுக்கு/ நியதிச் சட்ட நிறுவனமொன்றுக்கு உரித்துடையதாக இருத்தலாகாது.)
     - 2.4.1 உரித்தாளியின் பெயர்: ..............................................................................
     - 2.4.2 உரித்தாளியின் அஞ்சல் முகவரி: ..............................................................
       ..............................................................................................
     - 2.4.3 உரித்தாளியின் விருப்பத்தைத் தெரிவிப்பதற்கான கையொப்பம்: .........................................
     - 2.4.4 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம்: வீட்டு: ........................ கையடக்க: ..........................

3. வெளிப்படுத்துகை

மேலே தகவல் வழங்கப்பட்டுள்ள இடத்தில் மேலே குறிப்பிடப்பட்ட தேர்தலுக்குரியதாக .......................................... ........................................................ என்ற கட்சி/ சுயேச்சைக் குழுவுக்காக அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகமொன்றைப் பேணிச் செல்வதற்கான அனுமதியைக் கோருகின்றேன். இந்த இடம், அரசாங்கத்துக்கோ அல்லது அரச நிறுவனமொன்றுக்கோ உரித்தானதோர் இடமல்லவெனவும், இந்த அலுவலகம்/ காணி/ கட்டிடத்தின் உரித்தாளியின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன். பொதுச் சட்டமும் தேர்தற் சட்டமும் மீறப்படாத வகையில் செயற்படுவேன் எனவும், மேற்குறித்த அலுவலகம், பிரச்சார அலுவலகங்களைத் தாபிப்பதற்குரிய அறிவுறுத்தல்களுக்கமைய பேணப்படுமெனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..........................................................................

(கட்சியின் செயலாளரின் / சுயேச்சைக் குழுவின் தலைவரின் / அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் கையொப்பம்)

(பதவி முத்திரை)

திகதி: ... ........................

---

### அலுவலகம் தாபிக்கப்படுகின்ற பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை

..................................................

..................................................

இந்த அலுவலகத்தைத் தாபிப்பதற்கு உரிய இடத்தின் முகவரி .................................................................................. ........................................................................... எனவும், அவ்விடம் எந்தவோர் அரச நிறுவனத்துக்கு/ நியதிச் சட்ட நிறுவனத்துக்கு உரித்துடையதொன்றல்ல எனவும், உத்தேச அலுவலகத்திலிருந்து மாவட்ட செயலகம், தேர்தல்கள் அலுவலகம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் என்பன மறுபுறத்தில் காட்டப்பட்டுள்ள தூர எல்லைகளினுள் அமையப் பெற்றிருக்கவில்லை எனவும் அறிக்கையிடுகின்றேன்.

(பதவி முத்திரை)

.................................

கிராம அலுவலரின் கையொப்பம்

திகதி: ..........................

(பக்கம் 02 இல் காண்க.)

අ

## அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகங்கள்

**தேர்தல்கள் அலுவலகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.**

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,

.............................................. பொலிஸ் நிலையம்

.................................................................................................................... என்ற அரசியற் கட்சி/ ........................................................................ இன், தலைமையிலான சுயேச்சைக் குழு (இலக்கம் .............., சின்னம் ..................................) ...................................... சபைக்குப் போட்டியிடுகின்றமையால், அக்கட்சி / குழு சார்பாக பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அலுவலகத்தை நடாத்திச் பேணிச் செல்வது தொடர்பில் ஆட்சேபனையொன்றில்லை.

............................................

தெரிவத்தாட்சி அலுவலர்

............................................ மாவட்டம்/ சபை (பதவி முத்திரை)

திகதி : .........................................

**குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் பூரணப்படுத்துவதற்காக**

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்சியின்/ குழுவின் மத்திய அலுவலகத்தைத் தாபிப்பதற்கான அறிவித்தல் கையேற்கப்பட்டது.

இந்த அலுவலகத்தை தாபித்தல், தொடர்பில் பிரச்சினையேதும் இருப்பின், உடனடியாக மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

............................................................................... (பதவி முத்திரை)

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கையொப்பம்

............................................................ பொலிஸ் நிலையம். திகதி: ......................................

அறிவுறுத்தல்கள்

1. தேர்தல் சட்டத்திற்கமைய கட்சி வேட்பாளர் பிரச்சார பலகைகளைக் காட்சிப்படுத்த முடிவது, பிரச்சாரக் கூட்டம் நடைபெறும் இடமொன்றில் மாத்திரமென்ற போதிலும் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகங்களில் கட்சியின் பெயர், சின்னம், கட்சித் தலைவரின் உருவப்படம் மற்றும் தேவைப்படின் அனைத்து வேட்பாளர்களின் உருவப்படங்களைக் கொண்ட ஒரு பிரச்சார பலகையை மாத்திரம் காட்சிப்படுத்தல் முடியும். அவ்வலுவலகம் அமையப் பெற்றுள்ள காணியில் சோடனைகளைச் செய்வது தொடர்பில் ஆட்சேபனையொன்றில்லை. இருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெருந்தெருக்கள், பாதையோரங்கள் (நடை பாதை) அல்லது மின் கம்பங்கள்/ தொலைபேசிக் கம்பங்கள் என்பவற்றில் இதனோடு தொடர்புடைய சோடனைகளைச் செய்ய முடியாது.

2. பொலிஸார் அல்லது வேறு எவரேனும் அலுவலரொருவர் வருகை தந்து கோரும் சந்தர்ப்பத்தில் அலுவலகத்தை தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக, அதன் பிரதியொன்றை அலுவலகத்தில் காட்சிப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறுமிடத்து, குறித்த தேர்தல் அலுவலகத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3. அலுவலகத்தை தாபிக்க வேண்டிய விதமும் நடாத்திச் செல்ல வேண்டிய காலப்பகுதியும் வருமாறு:-

| | | |
|---|---|---|
| அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகம் | போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர் / சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் / அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் உள்ளூர் அதிகார சபையொன்றுக்கு ஒன்று வீதம் | 2023.................. ஆம் திகதி நள்ளிரவு வரை. |

4. அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகமொன்றைத் தாபிக்கும்போது ஓர் உள்ளூர் அதிகார சபைக்கு குறித்த உள்ளூர் அதிகாரசபை பிரதேசத்தினுள் ஒரு மத்திய அலுவலகத்தை மாத்திரம் தாபிக்க முடியும். இவ்வாறான அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகங்கள் 2023...................... ஆம் திகதி நள்ளிரவிலிருந்து அகறறப்படல் வேண்டும்.

5. எந்தவோர் அனுமதியளிக்கப்பட்ட தேர்தல் அலுவலகமும் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகம், மாவட்ட தேர்தல்கள் அலுவலகம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் போன்ற நேரடியாக தேர்தலோடு தொடர்புடைய அரச நிறுவனங்களிலிருந்து 150 மீற்றருக்குக் குறைந்த தூரத்தினுள் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. நகர சபைகளுக்காக 100 மீற்றர் வரையும், மாநகர சபைகளுக்காக 75 மீற்றர் வரையும் இவ்வெல்லையைக் குறைக்க முடியும்.

6. அரச வைத்தியசாலைகள், உள்ளூர் அதிகார சபைகள், அஞ்சல் அலுவலகங்கள், நீதிமன்றக் கட்டிடத்தொகுதிகள் அல்லது அரச பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் தேர்தல் அலுவலகங்களைத் தாபிப்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு வேட்பாளர்களிடமும் மும்முர ஆதரவாளர்களிடமும் கேட்டுக்கொள்ளப்படுவதோடு, அவ்வாறான நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறான விதத்தில் தாபிக்கப்படுகின்ற அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. அவ்வாறான ஏதேனுமோர் அலுவலகம் காரணமாக வாகன நெரிசல் அல்லது பொதுமக்களுக்கு இடையூறுகள் அல்லது சிரமங்கள் ஏற்படுமாயின், அவ்வலுவலகத்தைத் தாபிப்பதற்கான அனுமதி அகற்றப்படும்.

படிவ இல.2

கட்சிச் செயலாளர் / அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர் இக்கோரிக்கையைச் செய்தல் வேண்டும்.

*மூன்று(3) பிரதிகளில் பூரணப்படுத்த வேண்டும் என்பதோடு, அம்மூன்று பிரதிகளிலும் கிராம அலுவலர் குறிப்புக்களையிடுதல் வேண்டும். அம்மூன்று பிரதிகளையும் முதலில் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, தேர்தல்கள் அலுவலகத்தின் பரிந்துரை சகிதம் இரண்டு(2) பிரதிகள் வழங்கப்படும். அவ்விரண்டு பிரதிகளையும் உரிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த பின்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் குறிப்பு சகிதம் ஒரு(1) பிரதி விண்ணப்பித்தவருக்கு வழங்கப்படும். அதனை கட்சி/குழு அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.*

உள்ளூர் அதிகார சபை :- ..........................................................

..........................................................

கட்சி / சுயேச்சைக் குழு :- ..........................................................

(அதிகாரமளிக்கப்பட்ட முகவர்/ சுயேச்சைக் குழுவின் தலைவரின் பெயர்)

முகவரி: ..........................................................

..........................................................

*(பூரணப்படுத்துவதற்கு முன்னர் பின்புறத்திலுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.)*

2023 ..................................

தெரிவத்தாட்சி அலுவலர், ..........................................................

*(உள்ளூர் அதிகார சபையின் பெயர்)*

| அலுவலகப் பாவனைக்கு | |
|---|---|
| வட்டாரத்தின் இலக்கம் | வட்டாரத்தின் பெயர் |
| | |

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, .......................................... பொலிஸ் நிலையம்.

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2023
## தேர்தல் அலுவலகங்களைத் தாபித்தல்

கட்சி/ சுயேச்சைக் குழுக்களுக்கான வட்டாரமொன்றுக்காக தாபிக்கப்படும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகம்

1. கட்சி / சுயேச்சைக் குழு : ..........................................................
2. அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் / சுயேச்சைக் குழுவின் தலைவரின் பெயர்: ..........................................
3. அலுவலகம் தாபிக்கப்படவுள்ள வட்டாரத்தின் இலக்கமும் பெயரும் : ..........................................
4. அலுவலகம் தாபிக்கப்படும் வட்டாரத்தின் முகவரி : ..........................................
5. அலுவலகத்தின் அமைவிடமும் குறித்த இடத்தின் உரித்தும் :

 5.1 குறித்த முகவரியின் உரித்து :
 *(இவ்விடம் ஏதேனும் அரச நிறுவனமொன்றுக்கு / நியதிச் சட்ட நிறுவனமொன்றுக்கு உரித்தானதாக இருத்தலாகாது.)*
 அம்முகவரிக்கு உரிய கிராம அலுவலர் பிரிவு : ..........................................

 5.2 உரித்தாளியின் பெயர்: ..........................................
 5.2.1 உரித்தாளியின் அஞ்சல் முகவரி: ..........................................
 5.2.2 உரித்தாளியின் விருப்பத்தைத் தெரிவிப்பதற்கான கையொப்பம்: ..........................................
 5.2.3 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம்: வீட்டு: ........................ கையடக்க: ........................

6. வெளிப்படுத்துகை

மேலே தகவல் வழங்கப்பட்டுள்ள இடத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தலுக்குரியதாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்கான அனுமதியைக் கோருகின்றேன். இந்த இடம் அரசாங்கத்திற்கு அல்லது வேறு நிறுவனமொன்றிற்கு உரித்தானதோர் இடமல்லவெனவும், இவ்வலுவலகத்தைத் தாபிப்பதற்கு உரிமையாளரின் முறையான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன். பொதுச் சட்டம், தேர்தற் சட்டம் என்பன மீறப்படாத வகையில் செயற்படுவேன் எனவும், மேற்குறித்த அலுவலகம், பிரச்சார அலுவலகங்களைத் தாபித்தலுடன் தொடர்புடைய அறிவுறுத்தல்களுக்கமைய நடாத்திச் செல்லப்படுகின்றதெனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..........................................................

(கட்சியின் செயலாளர் / சுயேச்சைக் குழுவின் தலைவர் / அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் கையொப்பம்)

(பதவி முத்திரை)

கையொப்பம் : ........................

திகதி : ................................

---

அலுவலகம் தாபிக்கப்படுகின்ற பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை

அலுவலக முகவரி:-

..........................................

..........................................

இந்த அலுவலகத்தைத் தாபிப்பதற்குரிய வட்டாரத்தின் இலக்கம் மற்றும் பெயர் : .......................................... .......................................... எனவும், அவ்விடத்தில் அலுவலகமொன்றைத் தாபிப்பதற்கு உரித்தாளியின் ஒருப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதெனவும், மாவட்ட செயலகம், தேர்தல்கள் செயலகம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் என்பன பின்புறத்தில் காட்டப்பட்டுள்ள தூர எல்லைகளினுள் அமையப் பெறவில்லையெனவும் அறிக்கையிடுகின்றேன்.

(பதவி முத்திரை)

..........................................

கிராம அலுவலர் கையொப்பம்

திகதி : ..........................................

*(பக்கம் 02 இல் காண்க.)*

கட்சி/ சுயேச்சைக் குழுக்களுக்கு வட்டாரமொன்றுக்காக தாபிக்கப்படும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகம்

தேர்தல்கள் அலுவலகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,

.............................................. பொலிஸ் நிலையம்

........................................................................................................ என்ற அரசியற் கட்சி/ ........................................................... இன், தலைமையிலான சுயேச்சைக் குழு (இலக்கம் ............., சின்னம் ....................................) ...................................... சபைக்குப் போட்டியிடுகின்றமையால், அக்கட்சி / குழு சார்பாக பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அலுவலகத்தை நடாத்திச் பேணிச் செல்வது தொடர்பில் ஆட்சேபனையொன்றில்லை.

..............................................
தெரிவத்தாட்சி அலுவலர்
.............................................. மாவட்டம்/ சபை

(பதவி முத்திரை)

திகதி : .......................................

குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் பூரணப்படுத்துவதற்காக

கட்சியின்/ குழுவின் தலைவரின் பெயர்: ..........................................................................................................

மத்திய அலுவலகத்தைத் தாபிப்பதற்கான அறிவித்தல் கையேற்கப்பட்டது.

இந்த அலுவலகத்தை தாபித்தல் தொடர்பில் பிரச்சினையேதும் இருப்பின், உடனடியாக மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(பதவி முத்திரை)

..............................................................................
பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கையொப்பம்

.............................................................. பொலிஸ் நிலையம்.

திகதி: ......................................

அறிவுறுத்தல்கள்

1. தேர்தல் சட்டத்திற்கமைய கட்சி வேட்பாளர் பிரச்சார பலகைகளைக் காட்சிப்படுத்த முடிவது பிரச்சாரக் கூட்டம் நடைபெறும் இடமொன்றில் மாத்திரமென்ற போதிலும், இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை மத்திய அலுவலகங்களில் கட்சியின் பெயர், சின்னம், கட்சித் தலைவரின் உருவப்படம் மற்றும் தேவைப்படின் அனைத்து வேட்பாளர்களின் உருவப்படங்களைக் கொண்ட ஒரு பிரச்சார பலகையை மாத்திரம் காட்சிப்படுத்தல் முடியும். அவ்வலுவலகம் அமையப் பெற்றுள்ள காணியில் சோடனைகளைச் செய்வது தொடர்பில் ஆட்சேபனையொன்றில்லை. இருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெருந்தெருக்கள், பாதையோரங்கள் (நடை பாதை) அல்லது மின் கம்பங்கள்/ தொலைபேசிக் கம்பங்கள் என்பவற்றில் இதனோடு தொடர்புடைய சோடனைகளைச் செய்ய முடியாது.

2. பொலிஸார் அல்லது வேறு எவரேனும் அலுவலரொருவர் வருகை தந்து கோரும் சந்தர்ப்பத்தில் அலுவலகத்தைத் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக, அதன் பிரதியொன்றை அலுவலகத்தில் காட்சிப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறுமிடத்து, குறித்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3. அலுவலகத்தை தாபிக்க வேண்டிய விதமும் நடாத்திச் செல்ல வேண்டிய காலப்பகுதியும் வருமாறு:-

| | |
|---|---|
| வட்டாரமொன்றுக்கான அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு கிளை அலுவலகம் | அனுமதி பெறப்பட்ட திகதியிலிருந்து ஆரம்பிக்கக்கூடிய இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகங்களும் பிரச்சாரப் பலகைகளும், அறிவித்தல்களும் சோடனைகளும் 2023 ................................. ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின் அகற்றப்படுதல் வேண்டும். |

4. உள்ளூர் அதிகார சபையொன்றின் வட்டாரமொன்றுக்கு கட்சியொன்றுக்கு ஓர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகத்தை மாத்திரம் தாபிக்க முடியும்.

5. எந்தவோர் அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகத்தையும் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகம், மாவட்ட தேர்தல்கள் அலுவலகம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் போன்ற நேரடியாக தேர்தலோடு தொடர்புடைய அரச நிறுவனங்களிலிருந்து 150 மீற்றருக்குக் குறைந்த தூரத்தினுள் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. நகர சபைகளுக்காக 100 மீற்றர் வரையும், மாநகர சபைகளுக்காக 75 மீற்றர் வரையும் இவ்வெல்லையைக் குறைக்க முடியும்.

6. அரச வைத்தியசாலைகள், உள்ளூர் அதிகார சபைகள், அஞ்சல் அலுவலகங்கள், நீதிமன்றக் கட்டிடத்தொகுதிகள் அல்லது அரச பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் தேர்தல் அலுவலகங்களைத் தாபிப்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு வேட்பாளர்களிடமும் மும்முர ஆதரவாளர்களிடமும் கேட்டுக்கொள்ளப்படுவதோடு, அவ்வாறான நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறான விதத்தில் தாபிக்கப்படுகின்ற அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. அவ்வாறான ஏதேனுமோர் அலுவலகம் காரணமாக வாகன நெரிசல் அல்லது பொதுமக்களுக்கு இடையூறுகள் அல்லது சிரமங்கள் ஏற்படுமாயின், அவ்வலுவலகத்தைத் தாபிப்பதற்கான அனுமதி அகற்றப்படும்.